# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110214

1. District மாவட்டம் : Thanjavur  PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption  Year: ஆண்டு 2020  FIR No.: மு.த.அ. எண் 07/20  Date: நாள் 11-12-2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7, 7-A and 12 of Prevention of Corruption (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : U/S 102 Cr.P.C

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 10-12-2020  Date from : நாள் முதல் 17-45 hrs  Date to : நாள் வரை 24-00 hrs
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11-12-2020  Time : நேரம் 07-00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 km North west from PS
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி Joint no:1 Sub-Registrar office Thanjavur Thanjavur (D.t.)
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Gajendran  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. Krishnamoorthy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1966  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Inspection Cell Officer  (g) Address : முகவரி Thanjavur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) T. Ilayaraja, Age 34/2020 s/o Thangarasu, Assistant, Incharge Joint No1 Sub Registrar, Thanjavur 2) S. Raja Rajan, Age 38/2020, s/o Seran Unregistered document Writer, Thanjavur 3) R. Prabhakaran age 33/20 s/o Rethinavel, Thanjavur 4) B. Ravikumar age 45/20, s/o Balakumar, Thanjavur 5) P. Devendiran 49/20, s/o Padmanaban, Thanjavur

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —NIL

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிநிதி அனுப்பப்பட்டது :

இன்று 11.12.2020ம் தேதி காலை 07.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராகிய நான், நிலைய பொறுப்பில் இருந்தபொழுது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன், அவர்கள் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு : 10.12.2020 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர். நம்பர் -1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்வதற்கு நம்பர்-1 இணை சார் பதிவாளரும், நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக ஊழியர்களும் கையூட்டு கேட்டு பெறுவதாக தஞ்சாவூர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திரு.K.கஜேந்திரன் (வட்டாட்சியர்) ஆகிய எனக்கு கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 16.30 மணிக்கு சென்று தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன் அவர்களிடம் தகவல் தெரிவித்தும், அதன்பின்னர் 10.12.2020ம் தேதி, 17.15 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P. Padmanabhan Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் P.பத்மநாபன் பதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 11/12/2020 (signature) 11/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11-12-2020 13-00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.MANOHARAN
Rank: நிலை DSP (VAC) Thanjavur No. எண் ..........

கண்காணிப்பு பிரிவு அலுவலகத்லிருந்து இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு, 17.45 மணிக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தஞ்சாவூர் நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நான் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு கண்காணிப்பாளர் பிரிவு அலுவலர்களுடன் சென்று, அங்கு பணியில் இருந்த மாவட்ட பதிவாளர் அலுவலக உதவியாளர் மற்றும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் பொறுப்பு திரு.T.இளையராஜா அவர்களிடமும் மற்றும் மேற்படி அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்த அலுவலர்களிடமும் திடீர் சோதனை பற்றிய தகவல் தெரிவித்து, மேற்படி திடீர் சோதனையை மாலை 17.45 மணிக்கு மேற்கொண்டபோது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் ஆகிய என்னால் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் மகசர் விபரம் கீழ்கண்டவாறு.

நேற்று 10.12.2020 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர். நம்பர் -1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்வதற்கு நம்பர்-1 இணை சார் பதிவாளரும், நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக ஊழியர்களும் கையூட்டு கேட்டு பெறுவதாக தஞ்சாவூர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திரு.K.கஜேந்திரன் (வட்டாட்சியர்) ஆகிய எனக்கு கிடைத்த தகவலின் பேரில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 16.30 மணிக்கு சென்று தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன் அவர்களிடம் தகவல் தெரிவித்தும், அதன்பின்னர் நேற்று (10.12.2020) 17.15 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்லிருந்து இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு, 17.45 மணிக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தஞ்சாவூர் நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நான், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு கண்காணிப்பாளர் பிரிவு அலுவலர்களுடன் சென்று, அங்கு பணியில் இருந்த மாவட்ட பதிவாளர் அலுவலக உதவியாளர் மற்றும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் பொறுப்பு திரு.T.இளையராஜா அவர்களிடமும் மற்றும் மேற்படி அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்த அலுவலர்களிடமும் திடீர் சோதனை பற்றிய தகவல் தெரிவித்து, மேற்படி திடீர் சோதனையை மாலை 17.45 மணிக்கு மேற்கொண்டபோது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் ஆகிய என்னால் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் மகசர் விபரம் கீழ்கண்டவாறு.

இந்த திடீர் சோதனையின்போது மாவட்ட ஆய்வுக் குழுவினர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்.

1) திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.

2) திரு.S.மனோகரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

**இந்த திடீர் சோதனையின்போது நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பணியில் இருந்தவர்கள்.**

(1) திரு.T.இளையராஜா 34/20 த/பெ தங்கராசு, உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர், நம்பர் - 1 இணை சார் பதிவாளர் (பொறுப்பு) தஞ்சாவூர்.

(2) திருமதி.அபிராமி 39/20 த/பெ அசோகன் க/பெ முத்துக்குமார், இளநிலை உதவியாளர், நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர்.

(3) திரு.V.கண்ணன், 52/20 அலுவலக உதவியாளர், நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர்.

ஆகியோர் பணி செய்துகொண்டிருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரும் லஞ்ச ஒழிப்பு துறையினரும் தங்களை அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு திடீர் சோதனை செய்யப்பட்டது.

**இந்த திடீர் சோதனையின்போது தஞ்சாவூர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக அலுவலர்களிடம் சோதனையிட்ட விபரம் பின்வருமாறு.**

(1) தஞ்சாவூர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.T.இளையராஜா அவர்களை விசாரித்தபோது அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த பணம் ரூ.260/- ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அதில் ரூ.100/-ஐ செலவு செய்துவிட்டதாகவும் தெரிவித்து மீதம் ரூ.160/- இருப்பதாக அவரது மேல் சட்டை பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்து, அது அவரது சொந்த பணம் என்றதால், அந்தப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும்,

(2) நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இடபக்கம் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திருமதி.J.அபிராமி என்பவரை விசாரித்தபோது, அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த ரூ.700/-ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். எனவே, அந்த பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேலும்,

(3) நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இடப்பக்கம் இளநிலை உதவியாளர் இருக்கைக்கு அருகில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த அலுவலக உதவியாளர் திரு.V.கண்ணன் என்பவரை விசாரித்தபோது அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த ரூ.400/-ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேலும்,

(4) நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கையின் எதிரே அவருக்கு முன்னால் கணினி முன்பாக கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த TCS Staff செல்வி.S.கௌசல்யா என்பவரை விசாரித்தபோது, அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த ரூ.590/-ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். எனவே, அந்தப் பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேலும்,

(5) நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இருந்த கணிணி அறையில் தெற்கு பார்த்து கணினி முன்பாக அமர்ந்திருந்த TCS Staff (Camera Operator) திருமதி.K.கோமதி என்பவரை விசாரித்தபோது, அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த ரூ.200/- ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். எனவே, அந்தப் பணத்தை அவரிமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேலும்,

(6) நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இருந்த கணிணி அறையில் தெற்கு பார்த்து இரண்டாவது கணினி முன்பாக அமர்ந்திருந்த TCS Staff (Camera Operator) திருமதி.த.கவிதா என்பவரை விசாரித்தபோது, அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த ரூ.400/-ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். எனவே அந்தப் பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேலும்,

(7) நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இருந்த கணிணி அறையில் இருந்த இரவு காவலர் திருமதி.R.மல்லிகா என்பவரை விசாரித்தபோது, அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்த ரூ.500/-ஐ பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். எனவே, அந்தப் பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது.

மேலும் தஞ்சாவூர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த திரு.சே.ராஜராஜன் த/பெ சேரன், பதிவு பெறாத ஆவண எழுத்தர், தஞ்சாவூர்

என்பவரை விசாரித்தபோது, அவர் ஆவண எழுத்தர் உரிமம் பெறாமல் பத்திரம் எழுதி வருவதாக தெரிவித்தார். மேலும், தான் 5 வருடமாக பத்திரம் எழுதுவதாக சொன்னார். அதில் ஆவண உரிமம் பெற்றவர்களிடம் கையெழுத்து வாங்கிடுவேன் என்று கூறி அவர் தனது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.37,500/- பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்டபொழுது, தான் ஆவணம் எழுதி பத்திரம் பதிவு செய்தவர்களிடம் பெற்று நம்பர்-1 இணை சார் பதிவாளர் பொறுப்பு திரு.இளையராஜா என்பவருக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்று தெரிவித்தார். மேலும் அவரது மேல் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.130/-ஐ எடுத்து ஆஜர் செய்து அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால்,அந்தப் பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் வைத்திருந்த கையூட்டு பணத்தின் விபரம் கீழ்வருமாறு.

DENOMINATION

| SL.No | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 500 | 72 | 36,000.00 | 37,500/- |
| 2 | 200 | 1 | 200.00 | |
| 3 | 100 | 13 | 1300.00 | |

மேற்படி பணம் மேல் நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி ராஜராஜன், ஆவணம் எழுத உரிமம் பெற்று பதிவு செய்யாத ஆவண எழுத்தர் என்பதை நிரூபிக்கும் வகையில்அவர் இன்று ஒரு டிராப்ட் ஆவணம் எழுதி கரெக்ஷனுக்காக நம்பர்-1 இணை சார்பதிவாளரிடம் காண்பிப்பதற்காக தன் கைப்பட பென்சிலில் திருத்தியும், எழுதியும் வைத்திருந்த 2 பக்கங்கள் உடைய டிராப்ட் ஆவணம் வழக்கின் மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், ஆவண எழுத்தர் உரிமம் பதிவு செய்யாத ஆவண எழுத்தர் திரு.சே.ராஜராஜன் என்பவர் வைத்திருந்த கையூட்டு தொகை தொடர்பாக அவரிடம் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

11) மேலும் தஞ்சாவூர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த திரு.ரெ.பிரபாகரன் த/பெ ரெத்தினவேல், உரிமம் பெறாத ஆவண எழுத்தர், தஞ்சாவூர்

என்பவரை விசாரித்தபோது, அவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆவண எழுத்தர்உரிமம் பெறாமல் ஆவணம் எழுதி வருவதால், ஆவணத்தை எழுதி ஆவணம் உரிமம் பெற்றவர்களிடம் கையொப்பம் வாங்கிக்கொள்வதாக கூறி அவர் தனது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.14,500/- பணத்தை எடுத்து ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் பத்திரம் எழுதி பத்திரம் பதிவு செய்தவர்களிடம் பெற்று நம்பர்-1 இணை சார் பதிவாளர் திரு.இளையராஜாவுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்று தெரிவித்தார். மேலும், அவரது மேல் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.100/- தனது சொந்த பணம் என்று தெரிவித்து எடுத்து ஆஜர் செய்தார். எனவே, அந்தப் பணம் ரூ.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் வைத்திருந்த கையூட்டு பணத்தின் விபரம் கீழ்வருமாறு.

Denomination

| S.No | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 500 | 29 | 14,500.00 | 14,500/- |

மேற்படி பணம் மேல் நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி பிரபாகரன், ஆவண எழுத்தர் உரிமம் பதிவு செய்யாத ஆவண எழுத்தர், நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் நம்பர்-1 இணை சார்பதிவாளர் திரு.இளையராஜா என்பவரிடமிருந்து வாங்கி வைத்திருந்த அசல் ஆவணத்தை (ஆவண எண்.6365/2020) பெற்று அதை ஜெராக்ஸ் எடுத்து அதில் நானும், காவல் துணை கண்காணிப்பாளரும், நம்பர்-1 இணை சார் பதிவாளர் திரு.இளையராஜா, பிரபாகரன் ஆகியோர் கையெழுத்திட்டு, மேல் நடவடிககைக்காக மேற்படி ஜெராக்ஸ் ஆவணம் நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அதன் அசல் ஆவணம் மேற்படி பிரபாகரனிடம் கொடுக்கப்பட்டது. மேலும், ஆவண எழுத்தர் உரிமத்தை பதிவு செய்யாத ஆவண எழுத்தர் திரு.ரெ.பிரபாகரன் என்பவர் வைத்திருந்த கையூட்டு தொகை தொடர்பாக அவரிடம் விசரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

III) மேலும் தஞ்சாவூர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் நின்று கொண்டிருந்த திரு.பா.ரவிக்குமார் த/பெ பாலகுமார், என்பவரை விசாரித்தபோது ஆவண எழுத்தர் V.செந்தில்குமார் என்பவரின் உதவியாளர் என்றும், இன்று ஆவண எழுத்தர் செந்தில்குமாருக்கு பத்திரப்பதிவு செய்வதற்காக வந்ததாகவும், தெரிவித்தார். மேலும்,

V.செந்தில்குமாரிடம் கடந்த 5 வருடமாக வேலை பார்த்து வருவதாக கூறினார். மேலும், அவரை விசாரித்தபோது, அவர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் திரு.இளையராஜாவுக்கு கொடுக்க கொண்டு வந்திருந்த கையூட்டு தொகையை தனது இருசக்கர வாகனம் TN 49 CA 0848 என்ற ஹோண்டா ஆக்டிவா வாகனத்தில் வைத்திருப்பதாக கூறி அந்த பணம் ரூ.8,800/-ஐ அலுவலகத்திற்குள் எடுத்து ஆஜர் செய்தார். அவர் வைத்திருந்த கையூட்டு பணத்தின் விபரம் கீழ்வருமாறு.

Denomination

| S.No | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 500 | 3 | 1,500.00 | 8,800/- |
| 2 | 100 | 61 | 6,100.00 | |
| 3 | 100 (பின் அடிக்கப்பட்டிருந்தது) | 12 | 1,200.00 | |

மேற்படி பணம் மேல் நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆவண எழுத்தர் V.செந்தில்குமார் உதவியாளர் ரவிக்குர், நம்பர்-1 இணை சார்பதிவாளர் திரு.இளையராஜாவிடம் வாங்கி வைத்திருந்த அசல் ஆவணத்தை (ஆவண எண்-6352/2020) பெற்று அதை ஜெராக்ஸ் எடுத்து அதில் நகல், காவல் துணை கண்காணிப்பாளர், நம்பர்-1 இணை சார் பதிவாளர் பொறுப்பு இளையராஜா, ரவிக்குமார் ஆகியோர் கையெழுத்திட்டு, மேல் நடவடிக்கைக்காக மேற்படி ஜெராக்ஸ் ஆவணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி அசல் ஆவணம் ரவிக்குமாரிடம் கொடுக்கப்பட்டது. மேலும், ஆவணம் எழுத்தர் திரு.பா.ரவிக்குமார் என்பவர் வைத்திருந்த கையூட்டு தொகை தொடர்பாக அவரிடம் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

IV) மேலும் தஞ்சாவூர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் நம்பர்-1 இணை சார் பதிவாளர்இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த திரு.ப.தேவேந்திரன் த/பெ பத்மநாபன், என்பவரை விசாரிக்க அவர் தான்ஆவண எழுத்தர் தெட்சிணாமூர்த்திக்கு உதவியாளராக கடந்த 5 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், அவர் தான் தெட்சிணாமூர்த்தியின் ஆவணகளைதாக்கல் செய்வதாகவும் தெரிவித்தார். அவர் தன் வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் 9/12 எஸ்.வி.எம். அவன்யூ என்று எழுதப்பட்ட வெள்ளை பேப்பரில் மடித்து ரப்பர் பேண்ட் போட்டு தனியாக

வைக்கப்பட்டிருந்த தொகை ரூ.8,800/- ஐ எடுத்து ஆஜர் செய்து, மேற்படி பணம் ஆவண எழுத்தர் தெட்சிணாமூர்த்தி மூலம் பத்திரம் எழுதி பத்திரம் பதிவு செய்தவர்களிடம் பெற்று நம்பர்-1 இணை சார் பதிவாளர் திரு.இளையாராஜாவுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்று தெரிவித்தார். அவர் எழுதி கையூட்டு பணத்தை மடித்து வைத்திருந்த எஸ்.வி.எம் அவன்யூ என்று எழுதப்பட்டுள்ள துண்டு சீட்டு மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி முறையில் அவர் வைத்திருந்த பணத்தின் விபரம் கீழ்வருமாறு.

## Denomination

| S.No | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 500 | 17 | 8,500.00 | 8,800/- |
| 2 | 100 | 3 | 300.00 | |

மேலும், நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் நம்பர்-1 இணை சார் பதிவாளர் இருக்கைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த திரு.ப.தேவேந்திரன் த/பெ பத்மநாபன், என்பவரை விசாரிக்க அவர் தன் மேல் சட்டை பாக்கெட்டில் தனியாக வைத்திருந்த பணம் ரூ.9,400/-ஐ எடுத்து ஆஜர் செய்து, மேற்படி பணம் தான் ஆவண எழுத்தர் திரு.தெட்சிணாமூர்த்தி மூலம் பத்திரம் எழுதி பத்திரம் பதிவு செய்தவர்களிடம் பெற்று நம்பர்-1 இணை சார் பதிவாளர் இளையராஜாவுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்று தெரிவித்தார். மேலும், அவரது இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த அவரது சொந்தப்பணம் ரூ.60/- என்று தெரிவித்து எடுத்து ஆஜர் செய்தார். எனவே, அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் மேற்படி வகையில் வைத்திருந்த கையூட்டு பணத்தின் விபரம் கீழ்வருமாறு.

## Denomination

| S.No | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 500 | 16 | 8,000.00 | 9,400/- |
| 2 | 200 | 4 | 800.00 | |
| 3 | 100 | 5 | 500.00 | |
| 4 | 50 | 2 | 100.00 | |

மேற்படி பணம் மேல் நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி தேவேந்திரனிடமிருந்து மகஜரில் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.18,200/- ஆகும். மேற்படி ஆவண எழுத்தர் தெட்சிணாமூர்த்தி என்பவரின் உதவியாளர் தேவேந்திரன், நம்பர்-1 இணை சார்பதிவாளர் திரு.இளையராஜாவிடம் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் வாங்கி வைத்திருந்த அசல் ஆவணங்களை (ஆவண எண்கள்-6333/20, 6340/2020,

6363/2020) பெற்று அதை ஜெராக்ஸ் எடுத்து அதில் நான், காவல் துணை கண்காணிப்பாளர், நம்பர்-1 இணை சார் பதிவாளர் திரு.இளையராஜா, தேவேந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு மேற்படி 3 அசல் ஆவணங்களை தேவேந்திரன் என்பவரிடம் கொடுத்துவிட்டு, வழக்கின் மேல் நடவடிக்கைக்காக மேற்படி 3 ஆவணங்களின் ஜெராக்ஸ் காப்பி மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும், ஆவண எழுத்தர் திரு.தேவேந்திரன் என்பவர் வைத்திருந்த கையூட்டு தொகை தொடர்பாக அவரிடம் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், நம்பர்-1 இணை சார் பதிவாளர் இளையாராஜ என்பவரிடம் மேற்படி 1) ராஜராஜன், 2) பிரபாகரன், 3) ரவிக்குமார், 4) தேவேந்திரன் ஆகியோரிடம் கையூட்டு தொகை கேட்டு வாங்குவது சம்மந்தமாகவும், ஆவண உரிமம் இல்லாமல் பத்திரம் எழுதுபவர்களையும், ஆவண எழுத்தர்களின் உதவியாளர்களையும் அலுவலத்திற்குள் அனுமதித்தது பற்றியும் விசாரித்தபோது, அவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கையூட்டு கேட்டு வாங்குவது சகஜம்தான் என்று தெரிவித்தார். மேலும் எழுத்தர் உரிமம் பெறாமல் பத்திரம் எழுதுவதும் சகஜம்தான் என்றார். மேலும், அவரது வாக்குமூலம் தனியாக பதிவு செய்யப்பட்டது.

மேலும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அவர்களிடம் இன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை பற்றி கேட்டபோது, அவர் இன்று 10.12.2020ம் தேதி, 41 கிரய ஆவணங்களும், 6 MOD ஆவணங்கள், 3 செட்டில்மென்ட் ஆவணங்கள்,, 2 ரசீது, 1 கன்ஸ்ட்ரக்ஷன் அக்ரீமென்ட் ஆவணம், ஆக மொத்தம் 53 ஆவணங்கள், இன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதில், மேற்படி 53 ஆவணங்களும் நகல் எடுக்கப்பட்டு, True Copy யில் நம்பர்-1 இணை சார் பதிவாளர் இளையராஜா கையெழுத்திட்டு மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், பணியாளர்கள் தினமும் வீட்டிலிருந்து கொண்டு வரும் பணத்திற்குரிய தனி நபர் பணப்பதிவேடு 02.01.2020ம் தேதி முதல் 10.12.2020 வரை எழுதப்பட்டுள்ளது மற்றும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக வருகை பதிவேடு, ஆவணங்களை பதிவு செய்தவர்கள் அசல் ஆவணங்களை திரும்பப்பெற்றுச் செல்லும் பதிவேட்டில் ஆவண எண்கள் குறிக்கப்பட்டு, ஆவணம் பதிவு செய்தவர்களின் கையெழுத்து பெறப்படாமலேயே ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ள 23.10.2020 முதல் 10.12.2020 வரை ஆவண விவரங்கள் எழுதிய ஆவணம் ஆகியவை மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், கட்டிட களப்பணிப் பதிவேட்டில் மொத்தம் உள்ள 1 முதல் 155 பக்கங்கள் கொண்ட பதிவேட்டின் 72 பக்கங்கள் வரை எழுதப்பட்டு, 540 வரிசை எண் வரை கொடுக்கப்பட்டுள்ளது. கட்டிட களப் பணி குறித்து வரிசை எண்.528 நாள் 30.11.2020 முதல் களப்பணி செய்த விவரம் குறித்து நம்பர்-1 இணை சார் பதிவாளர்

திரு.இளையராஜா என்பவரால் எழுதவும் எழுதப்படாமல் ஆவண எண்கள் சுழிக்கப்பட்டுள்ள ஆவணம் மகஜரில் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் களப்பணி செய்த பார்ட்டியினருக்கு திரும்ப கொடுக்காமல் நிலுவையில் உள்ள ஆவணம் 1) 5751/2020, 2) 5752/2020, 3) 5754/2020, 4) 5755/202, 5) 5756/2020, 6) 5758/2020 ஆகியவை ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு, True Copy-யில் நம்பர்-1 இணை சார் பதிவாளர் பொறுப்பு திரு.இளையராஜா என்பவர் கையெழுத்திட்டு கொடுத்த மேற்படி ஆவணங்கள் நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் நேற்று 10.12.2020ஆம் தேதி, 24.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

எனவே எதிரிகள் 1)திரு.T.இளையராஜா, த/பெ தங்கராசு, நம்பர்-1 இணை பதிவாளர் (பொறுப்பு) / உதவியாளர் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் (2) திரு.சே.ராஜராஜன் (ஆவணம் உரிமம் பெறாமல் பத்திரம் எழுதும் ஆவண எழுத்தர்) த/பெ சேரன், தஞ்சாவூர். (3) திரு.ரெ.பிரபாகரன் (ஆவணம் உரிமம் பெறாமல் பத்திரம் எழுதும் ஆவண எழுத்தர்) த/பெ ரெத்தினவேல், தஞ்சாவூர் (4) திரு.பா.ரவிக்குமார் (ஆவண எழுத்தர் V.செந்தில்குமார் என்பவரது உதவியாளர்) த/பெ பாலகுமார், தஞ்சாவூர் மற்றும் (5) திரு.ப.தேவேந்திரன் (ஆவண எழுத்தர் தெட்சிணாமூர்த்தி என்பவரது உதவியாளர்) த/பெ பத்மநாபன், தஞ்சாவூர், ஆகியோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.